III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,
THIRUVALLUR AT POONAMALLEE.
O.S.229/2022

Deposition of witness for the Plaintiff/PW1
solemnly by Thiru.M.Muthupandi, Junior Assistant,
in accordance with the provision of Act I for 1873 on 12-03-2026

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : | E.Jeevanantham | Village | : |
| Father's / Husband's Name | : | Ellappan | Calling | : |
| Age | : | | Taluk | : |

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

(சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமானம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.) நான் தாக்கல் செய்திருக்கின்ற வழக்குரையில் எந்த பகுதியிலாவது ஜீவா சிட்பன்ஸ்சை நான் நடத்தி வருவதாக சொல்லியிருக்கின்றேனா என்றால் சொல்லவில்லை. 15.10.2017 அன்று நான் புரோநோட்டை பெற்றுக்கொண்டதாக சொல்லியிருக்கின்றேன். அதனை எங்கு வைத்து பெற்றுக்கொண்டேன் என்றால் ஆலப்பாக்கத்திலுள்ள என்னுடைய அலுவலகத்தில் வைத்து பெற்றுக்கொண்டேன். அலுவலகம் என்றால் ஜீவா சிட்பண்ட் அலுவலகமா என்றால் ஜீவா சிட்பண்ட் அலுவலகம் அல்ல. என்னுடைய பைனான்ஸ் நடத்தி வரும் அலுவலகம். பைனான்ஸ் என்ன பெயரில் வைத்து நடத்தி வருகிறேன் என்றால் ஜீவா மணி பேங்கர்ஸ் என்னும் பெயரில் பைனான்ஸ் நடத்தி வருகின்றேன். ஜீவா சிட்பண்ட்ஸ்ன் அலுவலகம் நெ.131, ஆலப்பாக்கம் மெயின் ரோட்டில் இயங்கி வருகின்றது. என்னுடைய குறுக்கு விசாரணையின் போது ஜீவா சிட்பண்ட் நடத்திய 10 லட்சம் ரூபாய் சீட்டில் 3,75,000/- ரூபாய் தள்ளுபடி போக 6,25,000/-க்கு பிரதிவாதி சீட்டை எடுத்தார் என்று சொல்லியிருக்கின்றேன் என்றால் இந்த சீட்டிற்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் கிடையாது. 14.12.2010 ல் தான் இந்த சீட்டை எடுத்தார் என்று சொல்லியிருக்கின்றேன். இந்த சீட்டிற்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை. 14.12.2010 ல் எடுக்கப்பட்ட சிட்டிற்கு 3 பேர் கியரண்டார் என்றால் சரியல்ல. யாரை கியரண்டாராக வாங்கினேன் என்றால் அதுபோல கிடையாது. அந்த 3 பேர் மீதும் இந்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருக்கின்றேனா என்றால் அப்படி எதுவும் தாக்கல் செய்யவில்லை. இந்த

நீதிமன்ற வளாகத்தில் உள்ள நீதிமன்றங்களில் 17 வழக்குகள் நான் தாக்கல் செய்து இந்நீதிமன்றத்திலும் கூட மற்ற வழக்குகளில் சாட்சியம் அளித்திருக்கின்றேன் என்றால் எத்தனை வழக்குகள் என்று தெரியாது ஆனால் வழக்கு தொடர்ந்திருக்கின்றேன். இந்த நீதிமன்றத்தில் எத்தனை வழக்குகள் லைவாக இருக்கின்றது என்றால் அது என்னுடைய கவனத்தில் இல்லை. 2010 ல் கொடுக்கப்பட்ட புரோநோட்டை வைத்து தற்பொழுது இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கின்றேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி பஞ்சாப், ஹரியானாவில் மெசின்களை வாங்கி லாரியில் கொண்டு வந்து இங்கு விற்பனை செய்வார். அவ்வாறு விற்பனை செய்யும்பொழுது அவ்வபொழுது அவரது தொழிலுக்கு என்னிடம் பணம் வாங்குவார். நான் தாக்கல் செய்திருக்கின்ற வழக்குரை மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் இந்த விசயத்தை சொல்லவில்லை. இவ்வாறு மிசின் வாங்குவதற்கு நான் கொடுத்த பணத்தை காசோலை மூலமாக கொடுத்திருக்கின்றேனா என்றால் அவர் லோடு வந்தவுடன் தேவைபடுகின்ற பணத்தை என்னிடம் வாங்குவார். இந்த குறிப்பிட்ட தேதியில் நான் எந்த பணத்தையும் பிரதிவாதிக்கு கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. 2010 ல் பிரதிவாதிக்கு எத்தனை வயது என்று எனக்கு தெரியாது. வா.த.சா.ஆ.1 புரோநோட்டில் பிரதிவாதியின் வயது 55 என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 7 வருடம் கழித்து இந்த ஒரே ஒரு புரோநோட்டை எங்கிருந்தோ கண்டுபிடித்து இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல.

(அறிவார்ந்த பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது).